அசல்

2.5.42 எச். வைத்தியநாதன்

✓

அசல்-1

2 மேலப்பாவூர்
2. 5. 42.

அநேக நமஸ்காரம். செய்தியை அறிய
உள்ளம் பதறுகிறது. கடிதம் எழுத கை நடுங்குகிறது.
பேப்பரில் செய்தியைப் படித்தவுடன் என் மனநிலை
சொல்ல இயலாது. தமிழ்த்தாய் இவ்வளவு பணி
களைப் பெறத்தான் கடவுள் சங்கற்பித்திருந்தார்
போலும். தமிழ்நாட்டினது, தமிழன்னையினது
துரதிருஷ்டமே அவர்களது புகழுடல் நிலைநிறுத்தி
பூதவுடல் இழுத்துச் சென்றது. நமது துரதிருஷ்ட
மும் காலனுக்குத் துணையாய் நின்றுவிட்டது.
எவ்விதத்திலும் தமிழ்நாடும் தமிழன்னையும்
ஆற்றொணாத்துயருக்காளாய் விட்டனர்.

அன்று நான் இவ்விடம் புறப்
பட்டு வரும்போது எனக்கு அளித்த தரிச
னமே இறுதியான தரிசனம் என்று அறிந்தே
னில்லை. உடனிருந்து உதவாத பெரும்பாவி
யானேன். நான் செய்த கொடுமையைப்
போல் ஒருவரும் செய்யமாட்டார். ஊருக்
குப் போகவேண்டும் என்ற அவாவே
துரதிருஷ்டம் பிடித்த என்னை தமிழ்த்
தெய்வத்தின் சந்நிதியினின்றும்
பிடர்பிடித்துத் தள்ளிக் கொண்டு வந்து

அசல்

2.5.42 எச். வைத்தியநாதன்

அசல் - 1

வந்துவிட்டது. நானும் அவ்வாசைக்கு
அடிமைப்பட்டேன். அதன்படி நடந்தேன்.
அதன்பலனை அநுபவிக்கிறேன். அதனா
லேயே அவர்கள் உடனிருந்து உதவாத
பெரும் பாதகனானேன்.

எவ்வளவு புலம்பியும் பலனென்ன!
அவர்கள் அடிக்கடி கூறும் 'மழை
மொக்குளிற் றோன்றிக் கெடும்
யாக்கை' என்பதை நினைந்து நம்மை
நாமே தேற்றிக்கொள்வதைத் தவிர
வேறு வழியில்லை.

கடவுள் தமிழன்னைக்குப் பணி
செய்ய அவர்களை இவ்வுலகுக்கு அனுப்
பினார். நாம் செய்த பாவத்தினால் திரும்ப
வும் தன்னிடம் அழைத்துக் கொண்
டார். வேறு என்ன கூறுவது!

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
எச். வைத்தியநாதன்.

அசல்

2.5.42 எச். வைத்தியநாதன்

✓

அசல் - 1



அசல்

2.5.42 எச். வைத்தியநாதன்

அசல்-1

